

# வெற்றிக்கான செயல்முறை

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** உபா 18:15–22; யோசுவா 1; எபி 6:17,18; எபே 6:10–18; சங் 1:1–3; ரோமர் 3:31.

**மனன வசனம்:** என் தாசனாகிய மோசே உனக்குக் கற்பித்த நியாயப்பிரமாணத்தின்படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்கமாத்திரம் மிகவும் பலங்கொண்டு திடமனதாயிரு; நீ போகும் இடமெல்லாம் புத்திமானாய் நடந்துகொள்ளும்படிக்கு, அதை விட்டு வலது இடது புறம் விலகாதிருப்பாயாக. யோசுவா 1:7.

போஸ்டன் பில்ஹார்மோனிக் இசைக்குழுவின் இயக்குனரான பெஞ்சமின் சாண்டர், இசைபற்றி விளக்கிக்கொண்டிருந்தார். அதைக் கேட்டதும் தங்கள் செயல்பாடு எப்படி இருந்ததோ என்று மாணவர்களிடம் பதற்றம் உண்டானது. அதைக் கவனித்தவர். பதற்றத்தைத் தணிக்கவும், மாணவர்களின் முழுத்திறனையும் வெளியே கொண்டுவரவும், வகுப்பின் முதல் நாளில் அனைவருக்கும் 'முதல்தர' மதிப்பெண் வழங்கினார். இந்த 'மதிப்பெண்' அவர்களது செயல்பாட்டிற்கு அல்ல; செயல்பாட்டைத் தூண்டுவதற்கு. ஆனால் ஒரு நிபந்தனை போட்டார். அவர்கள் அந்தப் பருவ ஆண்டின் முதல் இரண்டு வாரங்களுக்குள் அந்தப் படிப்பு முடிகிற நாளின் தேதியிட்டு ஒரு கடிதம் எழுதவேண்டும். அந்தக் கடிதத்தில், அந்த முதல்தர மதிப்பெண்ணைப் பெற தாங்கள் ஏன் தகுதியானவர்கள் என்று எழுதியிருக்கவேண்டும்.

யோசுவாவின் புத்தகம் புதிய சாத்தியங்களின் புத்தகம். இஸ்ரவேலரின் வரலாற்றில் 40 ஆண்டுகள் மோசே முக்கியப் பங்காற்றி வந்தார். அந்தக் காலம் முடிந்திருந்தது. எகிப்திலிருந்து புறப்பட்டது, வனாந்தரத்தில் அலைந்தது, கலகத்தோடும் கடினக்கழுத்தோடும் நடந்துகொண்டது போன்ற அனுபவங்கள் முடிந்திருந்தன. தேவனுக்குக் கீழ்ப்படியச் சித்தமாக இருந்த ஒரு புதிய தலைமுறை வாக்குத்தத்த தேசத்திற்குள் நுழையவிருந்தார்கள். அது அவர்களது செயல்பாட்டிற்கு அல்ல, தேவன் எதிர்பார்த்த அளவுக்குச் செயல்படக் கொடுக்கப்பட்ட வாய்ப்பு. இஸ்ரவேலரின் வாழ்வில் ஒரு புதிய அத்தியாயத்தை தேவன் திறந்துவைத்தார், நம் வாழ்க்கையிலும் அவ்வாறு செய்ய வல்லவர்.

*2025, அக்டோபர் 4 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# ஒரு புதிய மோசே

**மோசே மரித்தபிறகு நிகழவிருந்ததை நினைப்பூட்டுகிற ஒரு வாக்குறுதியுடன் யோசுவாவின் புத்தகம் துவங்குவதிலுள்ள முக்கியத்துவம் என்ன? உபா 18:15 -22; யோசுவா 1:1-9.**

மோசே மரித்து, யோசுவாவை புதிய தலைவராக தேவன் நியமித்திருந்தார், இருவருக்கும் இடையில் ஒற்றுமைகள் இருந்தன. இஸ்ரவேலரின் பிதாக்களுக்கு வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குள் அவர்களை வழி நடத்திச் செல்வார்களெனச் இருவரிடமும் தேவன் சொல்லியிருந்தார். யோசுவாவிடம் தேவன், 'நான் மோசேக்குச் சொன்னபடி உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன்' என்றார். யோசுவா 1:3. முதலில் மோசேயிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை யோசுவா முடிக்கவேண்டியிருந்தது. அவர் உண்மையில் ஒரு புதிய மோசே.

**பின்வரும் வசனங்கள் யோசுவாவைப்பற்றி என்ன சொல்கின்றன? யாத் 33:11; எண் 14:6,30,38; 27:18; 32:12; உபா 1:38; 31:23; 34:9.**

மோசேயைப்போல ஒரு தீர்க்கதரிசியை தேவன் 'எழும்பப்பண்ணுவார்' என்று சொல்லப்பட்ட சமயத்தில் அதற்கான சாத்தியம் இருந்ததே தவிர, அது நிறைவேறியிருக்கவில்லை. உபா 18:15. யோசுவாவின் புத்தகத்தை வாசிக்கத் தொடங்கியதும் இந்த வாக்குறுதி நினைவுக்கு வருகிறது, அதன் நிறைவேறுதல் குறித்த எதிர்பார்ப்பு தொற்றிக்கொள்கிறது.

மோசே மரித்திருந்தாலும்கூட முதல் அதிகாரத்தில் அவரது பெயரே பிரதானமாக வருகிறது. அவரது பெயர் 10 தடவையும், யோசுவாவின் பெயர் 4 தடவையும்மட்டுமே வருகின்றன. மோசே 'தேவனுடைய தாசன்' என்று அழைக்கப்படுகிறார்; யோசுவா 'மோசேயின் ஊழியக்காரன்' என்று குறிப்பிடப்படுகிறார். யோசுவா 1:1. ஆனால் யோசுவா 'கர்த்தருடைய ஊழியக்காரன்' என்று அழைக்கப்படுவதற்கு வாழ்நாள் முழுவதும் உண்மையுடன் சேவித்து, கீழ்ப்படிதலுடன் வாழவேண்டியிருந்தது. யோசுவா 24:29.

யோசுவா முதல் அதிகாரம், இஸ்ரவேலின் இரண்டு பெரிய தலைவர்கள் இடையே அதிகாரப் பரிமாற்றம் நடந்ததுபற்றிப் பேசினாலும், அங்கும் முக்கியக் கதாபாத்திரம் தேவன்தாம்; அப்புத்தகம் அவரது வார்த்தைகளுடன் தொடங்குகிறது; அவரது வழிநடத்துதல்களால் நிறைந்துள்ளது. இஸ்ரவேலின் மெய்யான தலைவர் யார் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி வெளிப்படுகிறது.

**தேவன் தம் மக்களை வழிநடத்துவதற்கு யுகங்கள் நெடுகிலும் அநேக ஆண்களையும் பெண்களையும் அழைத்திருக்கிறார். அப்படியானால், கண்ணுக்குப் புலப்படாவிட்டாலும் திருச்சபையின் உண்மையான தலைவர் யார்?**

# கடந்துசெல்! பிடி! பிரி! சேவைசெய்!

**யோசுவா புத்தகத்தின் அமைப்புபற்றி யோசுவா 1ம் அதிகாரத்திலிருந்து என்ன தெரிகிறது?**

யோசுவா புத்தகம் முழுவதிற்கும் அறிமுகமாக முதல் அதிகாரம் உள்ளது. நான்கு உரைகள் உள்ளன; அவை அப்புத்தகத்தின் நான்கு பகுதிகள் சம்பந்தப் பட்டவை: கடந்துசெல்தல் (யோசுவா 1:2-9); கைப்பற்றுதல் (யோசுவா 1:10,11); தேசத்தைப் பிரித்தல் (யோசுவா 1:12-15); மற்றும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து சேவைசெய்தல் (யோசுவா 1:16-18).

அப்புத்தகத்தில் தேவனுடைய பூர்வாங்க திட்டங்கள் அடுத்தடுத்து அமைந் துள்ளன. ஒவ்வொரு திட்டத்திலும், கானானைக் கைப்பற்றுவது சம்பந்தமாக குறிப்பிட்ட ஒரு வேலையை யோசுவாவிடம் தேவன் கொடுக்கிறார்; அவை ஒவ்வொன்றும் வெற்றிகரமாக நிறைவேறிய பிறகு, அவை நிறைவேறியதாக அப்புத்தகம் சொல்லும்.

இறுதியில், அத்தேசத்தைச் சுதந்தரிப்பது சம்பந்தமாக தேவன் கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேறியிருக்கும். அதுமுதல், அத்தேசத்தை இஸ்ரவேலர்கள் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அதற்கு மெய்யான விசுவாச மும், அந்த விசுவாசத்தால் வருகிற கீழ்ப்படிதலும் முக்கியம். தேவனுடைய பூர் வாங்க திட்டங்களில் முதல் மூன்றை 'கடந்துசெல்', 'பிடி', 'பிரி' எனும் வினைச் சொற்கள் காட்டுகின்றன; இதற்கு மக்களுடைய சரியான எதிர்வினை கீழ்ப் படிதலாகும். அதாவது, அத்திட்டங்களில் கடைசியான 'சேவைசெய்'.

இவ்வாறு, யோசுவா புத்தகத்தில் நான்கு முக்கியப் பிரிவுகள் உள்ளன, ஒவ்வொன்றையும் குறிப்பிட்ட ஒரு கருத்தால், அதற்குரிய வார்த்தையால் வகைப்படுத்தலாம்:

1. கடந்துசெல் (யோசு 1:1-5:12)
2. பிடி (யோசு 5:13-12:24)
3. பிரி (யோசு 13:1-21:45)
4. சேவி (யோசு 22:1-24:33)

இவ்வாறு அப்புத்தகத்தின் அமைப்பு அதன் முக்கியச் செய்தியைக் கூறு கிறது: அதாவது, தேவனுடைய பூர்வாங்க திட்டங்கள் தானாக நிறைவேறுவ தில்லை. மாறாக, அவரது மக்கள் உண்மையாக நடப்பதை வைத்து நிறைவேறு கின்றன. அதாவது, தேவன் நமக்கு அனைத்தையும் செய்திருக்கிறார். நமக்கு நாமே செய்யக்கூடாதவற்றையும் செய்திருக்கிறார். எனவே நம்மால் எதைச் செய்யமுடியுமோ அதைச்செய்யுமாறு அழைக்கிறார். அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதுதான் நம் வேலை. பரிசுத்த வரலாறு முழுவதிலும் இதுதான் உண்மை, இன்றைக்கும் இதுதான் உண்மை. உதாரணமாக, வெளி 14:12இல் தேவனுடைய கடைசிக்கால மக்களைப்பற்றியும் இதே கருத்துதான் வருகிறது: அதாவது தேவன் நமக்குச் செய்துள்ளவற்றில் விசுவாசம்வைப்பதே, கீழ்ப்படிதலுக்கு வழிநடத்துகிறது.

**நீங்கள் அதிகம் விரும்புகிற தேவனுடைய வாக்குறுதிகளைப்பற்றி யோசியுங்கள். அவை நிஜமாக நிறைவேறுவதற்கு எப்படிப்பட்ட எதிர்வினை உங்களிடம் தேவைப்படுகிறது?**

# வாக்குத்தத்தத்தின் சுதந்தரவாளிகள்

யோசுவா 1:2,3இல், இஸ்ரவேலருக்கு தாம் தேசத்தைக் கொடுப்பதுபற்றிச் சொல்லும்போது, அதைக் கொடுத்துவிட்டதாகவே யோசுவாவிடம் தேவன் கூறுகிறார். அதன் அர்த்தம் என்ன?

தேசத்தின் எஜமான் தேவன்; அதை ஒரு பரிசாகக் கொடுத்தார். யோசுவா 1:2,3இல் 'கொடுத்தல்' என்பதற்கு, அதற்கான வினைச்சொல்லின், இருவேறு வடிவங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அது அத்தேசத்தைச் சுதந்தரிப்பதின் இரண்டு முக்கிய அம்சங்களைச் சுட்டிக்காட்டுகிறது. முதல் வடிவம், அத்தேசத்தைக் கொடுக்கிற செயல்முறையைக் குறிக்கிறது. யோர்தானுக்கு அப்பாலிருந்த பகுதிகளைமட்டுமே இஸ்ரவேலர் பிடித்திருந்தார்கள். வாக்குத்தத்த தேசத்தின் பெரும்பாலான பகுதிகளை இன்னும் கைப்பற்ற வேண்டியிருந்தது.

யோசுவா 1:3இல், அந்த வினைச்சொல் முற்றுப்பெற்ற வடிவமாக வருகிறது; அதாவது, அத்தேசம் ஏற்கனவே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது போலக் குறிப்பிடுகிறது. அத்தகைய செயல்களின் எழுவாய் தேவன் என்றால், அதற்கான வினைச்சொல் வடிவத்தை 'தீர்க்கதரிசன முற்றுக்காலம்' என்பார்கள். ஏனென்றால், அவரது வாக்குறுதிகளை நடந்துமுடிந்தவைகளாகவே கருதலாம்.

வசனம் 3இல், 'உங்கள்' என்கிற பன்மை சுட்டுப்பெயர் உள்ளது; எனவே அந்த வாக்குறுதி யோசுவாவுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த இஸ்ரவேலருக்கும் கொடுக்கப்பட்டது. 'மோசேக்கு சொன்னபடி' என்று கூறுவதால், தேவன் தம் நோக்கத்தை தொடர்ந்து செயலாற்றுவது புரிகிறது.

'அனைத்தும்', 'எல்லாம்' என்பதற்கான **கோல்** என்கிற எபிரெய வார்த்தையும் முதல் அதிகாரத்தில் பலமுறை வருகிறது. இந்தப் பெயர்ச்சொல், யோசுவாவுக்குமுன் வைக்கப்பட்ட இலக்கை முழுமையாக, முழு ஒழுக்கத்துடன் அடைய வேண்டியதைக் காட்டுகிறது. வாக்குத்தத்த தேசத்தைச் சுதந்தரிக்கிற செயல்முறையில் தேவனுக்கும் யோசுவாவுக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் இடையே முழுஇணக்கம் தேவைப்பட்டது.

**அந்தச் சமயத்தில், வாக்குத்தத்த தேசம் ஒரு வாக்குத்தத்தமாகமட்டுமே இருந்தது. ஆனாலும் தேவன் அதை ஒரு சுதந்தரம் என்று அழைக்கிறார். யோசுவா 1:4-6; எபிரெயர் 6:17,18. தேவனுடைய வாக்குத்தத்தங்களின் சுதந்தரவாளிகள் என்பதின் அர்த்தம் என்ன?**

தேவனுடைய வாக்குறுதிகள் மாயாஜாலமானவை அல்ல. தங்களை தாங்களே சாத்தியமாக்குகிற வல்லமையும் அவற்றிற்கு கிடையாது. அவை நிச்சயம் நிறைவேறுவதற்கான அச்சாரம் தேவனுடைய பிரசன்னம்தான்; அவர், 'நான் உன்னோடு இருக்கிறேன்' என்று சொல்கிறார். இஸ்ரவேலர் தப்பிப்பிழைப்பதற்கு கர்த்தருடைய பிரசன்னம் முக்கியமானதாக இருந்தது. அதில்லாமல் விசேஷித்த அழைப்பும், அடையாளமும் அல்லது ஊழியமும் அவர்களுக்கு இல்லை. யாத் 33:12-16. மாறாக, பல தேசங்களில் அவர்களும் ஒரு தேசமாக இருந்திருப்பார்கள். யோசுவா வெற்றிபெறுவதற்கு கர்த்தரின் பிரசன்னம் அவசியமாக இருந்தது.

இன்றைக்கும்கூட அது மாறிவிடவில்லை; அதனால்தான் மத்தேயு 28:20இல் இயேசு அந்த வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறார்.

# திடன்கொள்!

**பலங்கொண்டு திடமனதாயிருக்கும்படி இரண்டுமுறை யோசுவாவிடம் தேவன் வலியுறுத்துகிறார். ஏன்? யோசுவா 1:7-9.**

---

---

யோசுவாவுக்குக் கொடுக்கப்பட்ட பணி இமாலய சவால்கள் நிறைந்தது. தகர்க்கமுடியாத மதில்களுடைய பட்டணங்களில் கானானியர்கள் குடியிருந்தார்கள். யுத்தப்பயிற்சியும் பெற்றிருந்தார்கள். மாறாக, இஸ்ரவேலர் சாதாரண நாடோடிகள். அந்த அரணான மதில்களைத் தகர்ப்பதற்கு பழங்கால கருவிகள்கூட அவர்களிடம் இல்லை. அக்காலத்தில் உலக வல்லரசாக இருந்த எகிப்து கூட, கானானில் காலூன்ற முடியவில்லை என்று வரலாறு சொல்கிறது.

ஆனாலும் யுத்தத்திற்கான உறுதி, யுத்திகள் சம்பந்தமாகமட்டுமே பலங்கொண்டு திடமனதாயிருக்கும்படிக்குச் சொல்லப்படவில்லை. இஸ்ரவேலருக்கும் யாவேயுக்கும் இடையே இருந்த உடன்படிக்கையை விளக்கிய ட்டோராவுக்கும் அதன் நிபந்தனைகளுக்கும் உண்மையுடன் இருப்பதற்கும்கூட தைரியமும் பெலமும் தேவைப்பட்டன.

**நம் யுத்தம் இராணுவ ரீதியானது அல்லவென்றாலும், யோசுவாவிடம் சொல்லப்பட்ட ஊக்கமான வார்த்தைகளை நம் அனுதின ஆவிக்குரிய போராட்டங்களில் எவ்வாறு பயன்படுத்தலாம்? எபே 6:10-18.**

---

கிறிஸ்து தங்களிடம் ஒப்படைத்துள்ள ஊழியத்தை கிறிஸ்தவர்கள் இன்று நிறைவேற்றுவதற்கு, யோசுவா எதிர்கொண்ட அதே சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது; அதாவது, தங்கள் சொந்த பாவ இயல்புகளுக்கு எதிராகவும், துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளுக்கும் எதிராகவும், பொல்லாத ஆவிகளின் சேனைகளுக்கு எதிராகவும் போரிடவேண்டியுள்ளது. யோசுவாவைப்போல நமக்கும் கிறிஸ்துவின் பிரசன்னம் உறுதியளிக்கப்பட்டுள்ளது: ‘இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்.’ மத் 28:20. யோசுவாவுக்கு உதவியாக இருந்த கர்த்தருடைய பிரசன்னம் அவரது பயங்களைப் போக்கியதுபோல, இன்று நம் சந்தேகங்களையும் கவலைகளையும் போக்குவதற்கு அது போதுமானது. தேவனையும் அவர் நமக்குக் கொடுத்துள்ள வாக்குறுதிகளையும் நம்புகிற அளவுக்கு அவரை நன்றாக அறிந்திருக்கிறோமா என்பதுதான் கேள்வி. அதனால்தான் அவருடன் நமக்கு தனிப்பட்ட உறவு மிக மிக அவசியமாக இருக்கிறது.

---

**யோசுவாவுக்கு முன்பாக இருந்த அதே கேள்விதான் இன்று நமக்கு முன்பாகவும் இருக்கிறது. தேவன் சொல்வதைச் செய்வது அநேகருக்குப் பிடிக்காமல் அல்லது சௌகரியமில்லாமல் இருக்கலாம். ஆனாலும், நாம் எவ்வாறு உண்மையாக இருக்கமுடியும்?**

# செழிப்பும் வெற்றியும்

**யோசுவா 1:7-9ஐயும், ஆதி 24:40; ஏசா 53:10; சங் 1:1-3 வசனங்களையும் வாசியுங்கள். இந்த வசனங்களின் அடிப்படையில் செழிப்பும் வெற்றியுமான வாழ்க்கை என்றால் என்ன?**

'செழிப்பு' என்பதற்கான எபிரெய வாரத்தை **ஸலாக்.** யோசுவா 1:8; சமகால மொழிபெயர்ப்பு. இதற்கு, திட்டமிட்டபடி அப்படியே நடப்பது அல்லது சூழ்நிலைகள் சாதகமாக அமைவது என்று அர்த்தம் கூறலாம்.

'புத்திமான்' என்பதற்கான எபிரெய வார்த்தை **ஸகால்** (யோசுவா 1:8); இதை 'செழிப்பு' அல்லது 'வெற்றியான' என்று மொழிபெயர்க்கலாம். 'விவேகமாக நடப்பது' அல்லது 'புத்திமானாய் நடப்பது' என்றும் அர்த்தம் உண்டு. யோபு, நீதிமொழிகள், சங்கீதம் ஆகிய புத்தகங்களில் இந்த வார்த்தை அடிக்கடி வருகிறது; தேவனுக்குப் பயந்து, அவரது வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஞானமாக நடப்பதுதான் வெற்றியான வாழ்க்கை என்று வலியுறுத்தப்படுகிறது. இந்தக் கருத்தின்படி வெற்றி என்பது பொருளாதாரரீதியான வெற்றியல்ல; அதுவும் உண்டு என்றாலும், ஆவிக்குரிய விழுமியங்களுக்கும் நியதிகளுக்கும் இசைவாக வாழ்வதே வெற்றி. ஏனென்றால் அவைதாம் தேவன் சிருஷ்டித்திருக்கிற உலகத்தின் அடித்தளமாக, அவரது பிரமாணத்தின் வெளிப்பாடாக உள்ளன.

தேவனுடைய வாக்குறுதிகளில், குறிப்பாக விசுவாசத்தால்மட்டுமே இரட்சிப்பு என்கிற வாக்குறுதியில் நம்பிக்கை வைப்பதும், அவரது பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதும் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல. அவை ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை.

**பிரமாணத்திற்கும் விசுவாசத்திற்கும் இடையே உள்ள தொடர்புபற்றி ரோமர் 3:31 சொல்வது என்ன?**

நமக்காக இயேசு பாவநிவாரண பலியாக மரித்தார் என்பதை விசுவாசிப்பதையும், தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதையும் முரணாகப் பார்ப்பது, பொய்யான, ஆபத்தான ஒரு எதிரிணை கருத்தை நிறுவுவதாகும். நியாயப்பிரமாணமும் கிருபையும் சேர்ந்தே செல்கின்றன. நியாயப்பிரமாணத்தின் பங்குபற்றி மேலோட்டமாகமட்டுமே அறிந்திருப்பது 'நியாயப்பிரமாணத்தையும்' 'கிருபையையும்' எதிரெதிர் கருத்துகளாகப் பார்க்கச் செய்துவிடும்.

பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் நியாயப்பிரமாணத்தை மிகவும் மதித்தார்கள்; அதை மனமகிழ்ச்சியின் ஆதாரமாகப் பார்த்தார்கள். சங் 1:2; 119:70,77, 174. நியாயப்பிரமாணத்தை சரியாகப் புரிந்து, அதன்படி நடந்தால், நம்முடைய சொந்த பாவநிலைபற்றியும் (ரோமர் 7:7), கிறிஸ்துவினுடைய நீதியின் அவசியம் பற்றியும் (கலா 3:24) நாம் ஆழமாகப் புரிந்துகொள்ள அது வழிநடத்துகிறது.

---

**தேவகிருபையால் அவரது பிரமாணத்தைக் கைக்கொள்வதற்கு நீங்கள் அதிகமாக முயன்றிருக்கலாம்; ஆனாலும் நம்மை மூடுகிற கிறிஸ்துவின் நீதியின்றி நமக்கு வேறு வழியில்லை என்பதை உங்களுடைய அனுபவம் எவ்வாறு காண்பித்திருக்கிறது?**

# மேலும் படிக்க:

'இயேசு தம் வாக்குறுதிகளையும் எச்சரிப்புகளையும் எனக்காகவே கொடுத்திருக்கிறார். தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். தேவ வார்த்தையில் சொல்லப்பட்டுள்ள அனுபவங்கள் என் அனுபவங்களாக மாறவேண்டும். அங்குள்ள ஜெபமும், வாக்குறுதியும், போதனையும், எச்சரிப்பும் எனக்குரியவை. இவ்வாறு சத்தியத்தின் நியதிகளைப் பெற்று, அங்கீகரிக்கும்போது, அவை நம் வாழ்வின் ஓர் அங்கமாக, ஊக்குவிக்கிற சக்தியாக மாறுகின்றன. ஆத்துமாவில் ஏற்றுக்கொள்ளப்படுகிற தேவவார்த்தை சிந்தனைகளை மாற்றுகிறது, குணவளர்ச்சியில் பங்கெடுக்கிறது'.[1]

'விழுந்துபோன மனிதன் தன் சொந்த மிகச்சிறந்த நற்கிரியையால் எந்தப் புண்ணியத்தையும் பெறுவது சாத்தியமற்றது என்பதைவிட மிக அதிகமாக தியானிக்கவேண்டிய, அடிக்கடி வலியுறுத்தவேண்டிய அல்லது அனைவரது சிந்தையிலும் மிக ஆழமாகப்பதிக்கவேண்டிய கருத்து வேறு எதுவுமில்லை'.[2]

[1] Ellen G. White Comments, The SDA Bible Commentary, vol. 2, p. 994.

[2] Ellen G. White, Faith and Works, p. 19.

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *'யோசுவாவின் வாழ்க்கை மற்றும் சூழ்நிலைகளிலிருந்து நம் அனுபவம் பல விதங்களில் மாறுபட்டிருக்கலாம்; ஆனாலும் நம் வாழ்க்கையில் பயன்படுத்தும்படிக்கு அவரது வாழ்க்கையிலிருந்து என்ன ஆவிக்குரிய நியதிகளைக் கற்றுக்கொள்ளலாம்? ஒப்புமைகள்பற்றிப் படிக்கும்போது பின்னணிக் கருத்தை மனதில் வைத்திருப்பது ஏன் முக்கியம்?*

2. *தேவனுடைய வாக்குறுதிகளுக்கும், நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவதற்கும் இடையே உள்ள உறவுபற்றி கலந்தாலோசியுங்கள். அவை எவ்வாறு ஒன்றுக்கொன்று உதவியாக உள்ளன? ஒன்றை விட்டுவிட்டு மற்றதை முக்கியப்படுத்துவதிலுள்ள ஆபத்துகள் என்ன? அதாவது, கிருபையை விட்டுவிட்டு பிரமாணத்தை வலியுறுத்துவதிலுள்ள ஆபத்து என்ன? அல்லது பிரமாணத்தை விட்டுவிட்டு கிருபையை வலியுறுத்துவதிலுள்ள ஆபத்து என்ன?*

3. *இந்த வாரப் பாடத்தின் அடிப்படையில், வேதாகமக் கண்ணோட்டத்தில் வெற்றி குறித்து என்ன விளக்கம் கொடுப்பீர்கள்? வெற்றிகுறித்த கிறிஸ்தவ விளக்கத்தில் செழிப்பின் பங்கு என்ன?*

4. *மோசேயின் ஊழியக்காரனாக யோசுவா எப்படி உணர்ந்திருப்பார்? யோசுவாவின் பொறுப்புகள் அதிகம் இருந்தாலும், அவரைத் தாங்கி நடத்தும்படிக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தம் என்ன? யோசுவா 1:5.*

# மரத்தைத் தொழுதல்

**ஆண்ட்ரூ மெக்செஸ்னி**

தாய்லாந்தில் உலகளாவிய ஊழியராகப் பணியாற்ற தாய்லாந்தின் பாங்காக்னோய் முகாமிற்குச் சென்றபோதுதான், அங்குள்ள மரத்தைக் கவனித்தார் சுதாகர். மரத்தில் வண்ண வண்ண ரிப்பன்களைக் கட்டியிருந்தார்கள். அதைச் சுற்றி கட்டைகளாலும் கற்களாலும் செய்யப்பட்ட சிறு விக்கிரகங்கள் வைக்கப்பட்டிருந்தன. அடிமரத்தில் வாழைப்பழம், ஆப்பிள்கள், ஊதுவர்த்திகள் வைக்கப்பட்டிருந்தன. மூதாதையரின் ஆவி ஒன்று அந்த மரத்தில் குடியிருப்பதாக அங்குள்ள மக்கள் நம்பியதை சுதாகர் அறிந்துகொண்டார்.

தொண்டுள்ளம் கொண்ட ஒரு பெண்மணி செவந்த்–டே அட்வென்ட்டிஸ்ட் மிஷன் மருத்துவமனைக்கு தானமாகக் கொடுத்திருந்த ஒரு நிலத்தில் அந்த மரம் இருந்தது. அந்த மரத்தைத் தொழுதுகொள்ள எதற்காக முகாமுக்குள் அங்குள்ளவர்கள் வருகிறார்களென போதகரிடம் கேட்டார். அந்த நிலம் சபைக்குக் கொடுக்கப்படுவதற்கு முன்னரே அந்த ஊர் மக்கள் அதை வழிபட்டு வருவதாக போதகர் சொன்னார்.

அது உணர்வுகள் சம்பந்தப்பட்ட கலாச்சாரம் என்பது சுதாகருக்குப் புரிந்தது. எனவே, 'ரிப்பன்களையும் மற்ற பொருட்களையும் உடனே அகற்றிவிட்டால், மக்கள் கொந்தளிப்படையலாம்' என்று நினைத்தார்.

ஆனால் ஏதாவது செய்ய ஆசைப்பட்டார். பரலோகத்தின் தேவனை நோக்கி அதிகம் ஜெபித்தபிறகு, அந்த ஊரின் தலைவரிடமும் ஊர் மக்களிடமும் பழகினார். அந்த மரத்திற்கு அருகே கட்டப்பட்ட ஒரு புதிய செல்வாக்கு மையத்தில் நடைபெற்ற சமையல் வகுப்புகளுக்கும், ஆங்கில வகுப்புகளுக்கும், ஆராதனைகளுக்கும் வரும்படி அவர்களை அழைத்தார். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக ரிப்பன்கள், சிலைகள், வாழைப்பழங்கள், ஆப்பிள்கள், ஊதுவர்த்திகள் போன்றவற்றை அங்கிருந்து அகற்றினார். அதற்கு ஒரு வாரம் ஆனது.

பிறகு ஒருநாள், சுதாகருக்கு விநோதமான ஓர் அனுபவம் ஏற்பட்டது. அந்த மரத்தை அவர் கடந்துசென்றபோது, ஒரு சத்தம் அவரைக் கூப்பிட்டது. சுதாகர் தனக்குக் கீழ்ப்படிந்தால், அவருக்கு செல்வத்தைக் கொடுப்பதாகச் சொன்னது. ஆனால் சுதாகர் அந்தத் தூண்டுதலில் விழவில்லை. அந்த ஆவி கொடுக்கிற எதையும் அவர் விரும்பவில்லை. அது அங்கிருந்து சென்றுவிட ஆசைப்பட்டார். "இந்த வளாகத்தைவிட்டுச் செல்லவும், இனி ஒருபோதும் இங்கு வராமல் இருக்கவும் இயேசுவின் நாமத்தில் கட்டளையிடுகிறேன்" என்றார்.

மூன்று நாட்களுக்கு பிறகு, அந்த மரம் பட்டுப்போக ஆரம்பித்தது. இலைகள் எல்லாம் உதிர்ந்தன. நான்கு வாரங்களில் அந்த மரம் முற்றிலுமாகப் பட்டுப்போனது. சுதாகர் ஒரு கோடரியை எடுத்து, அதை வெட்டிப்போட்டார். அந்தச் செய்தி அந்த ஊர் முழுவதும் பரவியது. செல்வாக்கு மையத்திற்கு மக்கள் பெருந்திரளாக வர ஆரம்பித்தார்கள். ஒரே மெய்யான தேவனை நோக்கி ஜெபம்பண்ண அந்த ஊர்மக்களுக்கு சுதாகர் சொல்லிக்கொடுத்தார். அந்தச் செல்வாக்கு மையத்தில் நடைபெற்ற ஆராதனையில் ஏழுபேர் கலந்துகொள்ள ஆரம்பித்தார்கள், பிறகு ஞானஸ்நானம் பெற்றார்கள். உலகம் முழுவதிலும் நற்செய்தி சென்றிராத மக்களுக்கு நற்செய்தியை அறிவித்து வருகிற சுதாகர்போன்ற உலகளாவிய ஊழிய முன்னோடிகளுக்காக ஜெபியுங்கள். உலகளாவிய ஊழிய முன்னோடிகள்பற்றி அதிகம் அறிந்துகொள்ள: bit.ly/GMPioneers.

